# அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி, சிவகாசி

*எய்ட்ஸ் விழிப்புணர்வு முன் மாதிரி பயிற்சி கல்வி - முகாம்*

தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் இணைந்து மாணவர்களுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வு முன் மாதிரி பயிற்சி கல்வி முகாமினை 26/02/2014 அன்று நடத்தியது.






விருதுநகர் மாவட்டத்தில் இருந்து பல்வேறு பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியின் செஞ்சுருள் சங்க திட்ட அலுவலர் திரு. A. நாகேந்திரன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் திரு. M. நந்தகுமார் விழாவைத் துவக்கி வைத்து தலைமை உரையாற்றினார். திருத்தங்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலைய நம்பிக்கை மைய ஆலோசகர் திரு P. சங்கர், வளரிளம் பருவத்தில் இளைஞர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்தும், அதனைத் தவிர்ப்பதற்கு தேவையான திறன்கள் குறித்த பயிற்சியும் வழங்கினார்.

குறிப்பாக HIV / AIDS மற்றும் பால்வினைத் தொற்று நோய்கள் குறித்த தகவல்களும் வழங்கினார். பாதுகாப்பற்ற உடல் உறவு, சுத்திகரிக்கப்படாத ரத்தம், எய்ட்ஸ் பாதித்த தாயிடம் இருந்து குழந்தைக்கு ஆகிய வழிகளில் எய்ட்ஸ் பரவும் என்றும் பேசுதல், தொடுதல், கட்டிப்பிடித்தல், முத்தமிடுதல், இருமல், தும்மல், கொசு கடித்தல் ஆகிய வழிகளில் எய்ட்ஸ் பரவாது என்றும் கூறினார். எய்ட்ஸ் என்பது குணப்படுத்த முடியாத நோய் அதை கட்டுப்படுத்த மட்டுமே முடியும். ஆகவே இந்த நோய் வராமல் பாதுகாப்பாக வாழ்வதே சிறந்தது என்றும் கூறினார்.

திருத்தங்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் திருமதி. D. கோமதி ஜெயம் எய்ட்ஸ் பாதித்த ரத்த மாதிரியை கொண்டு சோதனை செய்து காட்டினார்.






விருதுநகர் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலக மேலாளர் திரு K. நாகராஜன் விழா நிறைவுரையாற்றினார். கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு. S. சுந்தரராஜன் நன்றியுரையாற்றினார்.

**முதல்வர்**